1979 நவம்பர் 8]

திரு. கோ. ரகோத்தமன்:— பேரவைத் தலைவர் அவர்களே, முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கண்டாச்சிபுரத்திற்கு அதன் சுற்றுப்புறத்திலே சுமார் இருபது கிராமங்கள் இருக்கின்றன. அந்த ஊராட்சியில் ஒவ்வொரு வாரமும் வாரச் சந்தை கூடுகிறது. அங்கே சுமார் 20 ஆயிரம் ஆடுமாடுகள் வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. மேலும் ஊராட்சி ஒன்றியத்தில் அதற்காக 1975 ஆம் ஆண்டிலேயே ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளதாக அறிகிறேன். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து அதை உடனடியாகச் செய்வதற்கு ஆவன செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஏற்கனவே ஓர் கால்நடை மருந்தகம் மணலூர்ப் பேட்டையில் செயல்பட்டு வருகிறது. கண்டாச்சிபுரத்தில் மருந்தகம் அமைக்கப்படுமானால் அது முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டாவது மருந்தகமாக அமையும். மேற்படி ஊராட்சி ஒன்றியம், கண்டாச்சிபுரத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கக்கோரியும், மருந்தக கட்டிடத்திற்காகும் செலவில் 2/3 பங்கினை ஏற்கவும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளது. கால்நடை மருந்தகம் தற்காலிகமாக செயல்பட வாடகையில்லா கட்டிடமொன்றினை ஒதுக்கித் தரவும், மருந்தகக் கட்டடம் கட்டுவதற்காக ஏற்ற நிலப்பரப்பினை ஒதுக்கித் தரவும் ஏற்று, முகையூர் ஊராட்சி ஒன்றியம் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பினால், கண்டாச்சிபுரத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவை தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில்* உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதை குறிக்கும்.

(2) தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் பதிவேட்டில் அங்கத்தினர்கள் பெயர் தமிழ் அகர வரிசைப்படி இருக்க வேண்டுவது குறித்து.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய வருகைப் பதிவேட்டில் ஆங்கிலத்திற்கு முதலிடமும் தமிழ் அதற்குக் கீழே நான் இருக்கிறேனா இல்லையா என்று சங்கடப்படுகிற நிலைமையும் அதேபோல் ஆங்கில அகர வரிசையை வைத்து இருப்பதும் தொடர்ந்து பாரம்பரியமாக இருந்து வந்திருக்கிறது. நாங்கள் கையெழுத்துப் போடுகிறபொழுது தமிழ் எங்களைப் பார்த்துக் கெஞ்சுவதைப் போல அதிகாரிகள் ஆங்கில மோகத்திலே தொடர்ந்து அதைச்

செய்திருக்கிறார்கள். ஆங்கிலத்திற்கு முதலிடம் இல்லாமல் தமிழுக்கு முதலிடம் கொடுத்து தமிழைச் சிறிய எழுத்தில் போடாமல் ஆங்கிலத்தைப்போல் பெரிய எழுத்திலே போட்டு அந்த அகர வரிசையை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை நியாயமானதும் சிந்திக்க வேண்டியதும் தான். தமிழுக்கு முதலிடமும் ஆங்கிலத்திற்கு பின்னாலேயும் இடம் கொடுக்கிற முறை இனிமேல் கடைபிடிக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: அகர வரிசை ஆங்கிலத்தில் தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் அகர வரிசையை கடைபிடிப்பார்கள்.

[முற்பகல் 10-10]

(ஆ) உறுப்பினர் இருக்கையில் ஆணி இருந்தது குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நான் நேற்றைய தினம் அவைக்கு வரும்பொழுது என்னுடைய இருக்கையிலே மூன்று இஞ்ச் நீளமுள்ள ஆணி இருந்தது. அது சாதாரணமாக ஏற்பட்டது என்று நினைத்து அதைத் தலைவரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வராமல் வெளியிலே தூக்கியெறிந்துவிட்டேன். ஆனால், இன்றைக்குப் பார்க்கும்பொழுதும் கூர்மையான ஆணியும், பென்சிலும் என்னுடைய இருக்கையில் பொருத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எழுத்து மூலமாகத் தாருங்கள். அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, அது அரசாங்கத்தின் சொத்து என்ற காரணமாக, அதை நீங்கள் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இ) கட்டிடத் தொழிலாளர்கள், கைது செய்யப்பெற்றது குறித்து.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள், அவர்கள் தங்கள் கோரிக்கையை வற்புறுத்துகின்ற முறையிலே கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் ஊர்வலம் வந்தவர்கள் கிட்டத்தட்ட 500 பேர்களுக்கு மேல் கைதாகி உள்ளே இருக்கிறார்கள். அது சம்பந்தமாக.........